செ.வெ.எண்: 01/பிப்ரவரி நாள்: 03.02.2020

**மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எஸ்.மலர்விழி, இஆப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூடுதல் கூட்டரங்கில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எஸ்.மலர்விழி, இஆப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

பொதுமக்கள் கோரிக்கை மனுக்களாக கல்வி உதவித்தொகை, இலவச தையல் இயந்திரம், சலவைப்பெட்டி, பசுமை வீடு, பட்டா மற்றும் சிட்டா பெயர் மாற்றம், வாரிசு சான்றிதழ், ஜாதிச்சான்றிதழ், சாலை வசதி, பேருந்து வசதி, குழந்தைகள் நல மையம், வேலைவாய்ப்பு, வீட்டுமனை பட்டா, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல், புதிய ஆழ்துளைக்கிணறு, தகனமேடை, குடிநீர் வசதி, புதிய மின் இணைப்பு வசதி, பட்டா வேண்டுதல், தரைமட்ட பாலம், மூன்று சக்கர வண்டி மற்றும் முதியோர் ஓய்வூதியத் தொகை மற்றும் உதவித் தொகை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மனுக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளின் மனுக்கள் என மொத்தம் 310 மனுக்கள் அளித்தனர். மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் மனுக்களை பெற்றுக்கொண்டு சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் வழங்கி ஒருவார காலத்திற்குள் மனுக்களை பரிசீலித்து உரிய தீர்வு காண வேண்டுமென உத்தரவிட்டார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.எச்.ரஹமத்துல்லா கான், மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் திரு.கோவிந்தன், தனிதுணை ஆட்சியர் (ச.பா.தி) (பொ) திருமதி.கீதா மற்றும் அனைத்துத் துறை அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.**